தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1977 ஜூலை 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிகழ்ச்சி நிரலில் முதல் நிகழ்ச்சி "வினாக்கள்-விடைகள்". வினாக்கள் அனுமதிக்கப்பட்டு இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விடைகள் வந்தபின் வினாக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு விடையளிக்கப்படும். இன்று வினா-விடை நேரம் இல்லை.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஒரு விஷயம் நான் சொல்ல விரும்புகிறேன். வினாக்களுக்கு 42 நாள் நோட்டீஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வினாவை இன்றைக்கு அனுப்பி வைத்தால், 42 நாள் பொறுத்துத்தான் அந்த க்வஸ்டியனுக்கு விடை வரும். Then it will become a dead question பார்லிமென்டில் 10 நாள்தான் நோட்டீஸ். அங்கு இதைவிட 'டபிள் தி மெம்பர்ஷிப்' (Double the membership) இருக்கிறது. அங்கு 11-வது நாள் பதில் வரும். அமைச்சர்கள் பதில் கொடுப்பார்கள். அதேபோல் இங்கும் செய்ய வேண்டும். ஆகவே, 42 நாள் என்பதைத் தயவுசெய்து குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: சட்டமன்ற விதிகளின்கீழ் சாதாரண கேள்விக்கு இத்தனை நாட்கள் அவகாசம் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. வினாக்கள் அங்கீகரிக்கப்பட்டவுடன், அந்தந்தத் துறைக்கு அனுப்பப்பட்டு, பதில்கள் சேகரிக்கப்பட்டு, அதற்குப் பின்னரே அமைச்சர்கள் பதில்

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அளிக்கிருர்கள். பதில்கள் சேகரிக்க அமைச்சர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட அவகாசம் கொடுக்கும் முறையை விதிகளில் ஏற்படுத்தி இருக்கிருர்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அவசரமான கேள்விகள் கேட்கவேண்டுமென்ருல் 'ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டியன்'—குறுகிய காலக் கேள்விகள் இருக்கின்றன; அந்த அடிப்படையிலே கேட்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நேற்றைக்கு முந்தைய நாள் இரங்கல் தீர்மானங்களை இங்கே முன் மொழிந்து நிறைவேற்றியபொழுது, காலஞ்சென்ற திரு. பொன்னப்ப நாடார்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய ஒழுங்குப் பிரச்சினையை ஒட்டியதா, நீங்கள் கேட்பது?

THIRU J. JAMES: Sir, on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறதே, அதை ஒட்டியதா என்று கேட்கிறேன். இது வேறு என்ருல் அப்புறம் அனுமதிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அமைச்சர் அவர்கள், அந்தந்த டிபார்ட்மென்டுக்கு அனுப்பி, பதில் பெற்று பிறகு அமைச்சர், அவைக்கு பதில் கொடுக்க வேண்டும், அதனுல், 42 நாள் என்று விதிமுறையிலே இருக்கிறது என்று சொன்னுர்கள். நாடாளுமன்றத்திலே இதே ப்ரொஸீஜர்தான். க்வஸ்டியன் கொடுத்தவுடனே அது டிபார்ட்மென்டுக்குப் போகும். அங்கிருந்து அமைச்சருக்குப் பதில் வரும். பிறகுதான், க்வஸ்டியன் லிஸ்டில், அது பிரின்ட் ஆகி சபையில் வரும். இருந்தாலும், க்வஸ்டியன் கொடுத்து 10 நாள் முடிந்து, 11-வது நாள் பதில் பிரின்ட் ஆகி வரும்போது, அங்கே பிராக்டிக்கபிள் (practicable) ஆகும் போது, நமக்கும் பிராக்டிக்கபிள் ஆகவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத்தினுடைய ஒழுங்குப் பிரச்னைக்குப் பதில் கூறுகிறேன். நம்முடைய சட்டமன்ற விதிகளில் அதிகபட்ச நாள் 42 என்றிருக்கிறதே தவிர, **10** நாள்களில் விடை வந்தால், 42 நாள் வரை பொறுத்திருக்கப்

போவதில்லை. அந்த விதிகளிலே மாற்றம் ஏற்பட்டால், திரு. உமாநாத் சொன்னதைப்போல் மாற்ற அவை தயாரானால், நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஆனால், இன்றைக்கிருக்கிற சட்டமன்ற விதிகளில் மாக்சிமம் 42 நாள் என்றிருக்கிறது. விடை, ஒரு வாரத்திலும் தயாராகலாம். 42 நாட்களிலும் தயாராகலாம். ஆகவே சட்டமன்ற விதிகளின்படி அதிகபட்ச நாள் 42 என்பதாகும்.

திரு. ரா. உமாநாத்: விதியை மாற்ற வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பின்னால் யோசிக்கப்படும். இன்றைக்கிருக்கும் விதிகளின்படி, அதிகபட்சம் 42 நாள் என்பதாகும். அதன்படிதான் அவையை நடத்தவேண்டியிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: அதையொட்டி நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். 42 நாள் என்பது தேவையற்றது. எனவே, அதை மாற்றி குறுகிய காலத்தில், மக்களுக்கு விவரங்கள் கிடைக்கும் வகையில் அவகாசத்தைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே கொடுத்த தீர்ப்பை ஒட்டித்தான் நீங்கள் எழுப்புகிறீர்கள். ரூல்ஸை நீங்கள் மாற்றினால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இன்றைக்கு இருக்கும் விதிகளை ஒட்டித்தானே அவை நடக்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இங்கே சொன்ன மாதிரி ஷார்ட் நோட்டீஸ் கொடுத்து 3 நாள் ஆகிறது. அதற்கு எவ்வளவு நாள் ஆகும்? அதையாவது, இவ்வளவு நாளைக்குள், குறுகிய காலத்திற்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். முதன் முதல் இன்றைக்கு, குறுகிய காலக் கேள்வியைக் கொண்டுவந்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும். அதையும் காலதாமதப் படுத்தாமல், கேள்விகளுக்கான விடையைச் சீக்கிரமாகக் கொண்டுவருவதற்கு, ஆவன செய்யவேண்டும். அதற்குத் தலைவரவர்கள் வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் இந்த மன்றத்தில் நீண்டகால பயிற்சி பெற்றவர். விடை தயாரான பிறகு, கொடுப்பதில் கால தாமதம் என்பதில்லை. ஆகையினால், இதில் காலதாமதம் என்ப தில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ரூல் 34-ல் 'Provided further that the Speaker may with the consent of the Minister concerned order a question to be entered in the list of questions with shorter notice than fifteen days.' என்றிருக்கிறது. அமைச்சர் ஒத்துக்கொண்டால், அதை முன்ன தாகவே கொண்டு வரலாம் என்றிருக்கிறது.

MR. SPEAKER: 'Consent of the Minister concerned' . . . .

THE HON. THIRU G. R. EDMUND: That too is not mandatory but it is only optional.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் கேட்டுக்கொள்வது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்ட ராமன் அவர்கள் சொல்லியதுதான். அமைச்சரிடம் சொல்லி சீக்கிரமாகக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ரா. பொன்னப்ப நாடார் அவர் களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் கொண்டுவரப் படாதது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நேற்றைக்கு முன் தினம் இங்கே இரங்கல் தீர்மானங்கள் கொண்டுவந்து நிறை வேற்றியபொழுது, காலஞ்சென்ற திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் கொண்டு வரப் படவில்லையே என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, அவையின் முன்னவர், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் இன்றையதினம் கொண்டுவரப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால், இன்றைக்குள்ள நிகழ்ச்சி நிரலைப் பார்க்கும்போது, அந்தத் தீர்மானம் சேர்க்கப்